1996 ஆகஸ்ட் 20] [திரு. துரைமுருகன்]

என்ற காரணத்திற்காக, இப்போது 12,000-மாகத் திறந்துவிட்டிருக்கிறோம். இது வெண்ணாற்றுப் பாசனம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி சொன்ன ஊர்கள் எல்லாம் வெண்ணாற்றுப் பாசனத்திலே வருகின்றன. இது கடைகோடியிலே இருக்கக்கூடிய ஒன்று. எனவே, இந்த முறை எப்படியும் தண்ணீரை அந்தப் பகுதிக்கு அனுப்ப வேண்டும் என்று நம் அதிகாரிகளை எல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். 12,000 கியூசெக்ஸ் திறந்திருக்கிற காரணத்தினால் தண்ணீர் போகும். நாளை மறுதினம் நல்ல செய்தியை அவர்கள் சொல்வார்கள்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

திரு. குத்தாலம் பி. கல்யாணம்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதையொட்டி ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். தண்ணீர் திறந்துவிட்டிருக்கிற இந்த நேரத்தில் முறைவைக்காமல்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் அவரிடம் விளக்கம்தான் கேட்க முடியும். கருத்து எல்லாம் நீங்கள் சொல்ல முடியாது. அது மானியக் கோரிக்கையிலேதான் சொல்ல வேண்டும். என்ன விளக்கம் என்று கேளுங்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை ஏற்கனவே ஆரம்பத்திலே துவக்கப்பட்டு அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதில் சொன்னார்கள். இதிலே மீண்டும் இன்னொரு திசையை நோக்கி விவாதம் போய்க்கொண்டிருக்கிறது. இது ஒரு நல்ல முன்மாதிரியா என்பதைத் துணைத் தலைவர் அவர்களே நிர்ணயிக்கட்டும். ஏனென்றால், இன்றைக்கு நீங்கள் கொடுக்கின்ற வாய்ப்பை இன்னொரு உறுப்பினருக்கும் கொடுக்க வேண்டிய நிர்பந்தம் உங்களுக்கும் ஏற்படும். இதையும் நீங்கள் யோசித்து முடிவுக்கு வரவேண்டும் என்று பணிவோடு வேண்டிக்கொள்கிறேன்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

திரு. குத்தாலம் பி. கல்யாணம்: மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் இருவருக்கு வாய்ப்பு இல்லை.

3. மானியக் கோரிக்கைகள், 1996-97, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 28-தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன்-தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 21-மீனளம்-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ந.பூ. இராமஜெயம் பேசுங்கள்.

திரு. ந.பூ. இராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று தொழிற்சாலை உள்ளடங்கலான தொழிலாளர் நலன் மற்றும் மீனளம் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பினை அளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எங்கு சென்றாலும் கோரிக்கையை வைப்பது தொழிலாளர்கள் பழக்கம் என்ற காரணத்தினால் முதலிலே ஒரு கோரிக்கை உங்களுக்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சட்டமன்றத்திற்கு முதன்முறையாக வந்திருக்கிறேன். முதன் முதலாக பேசுகின்ற வாய்ப்பையும் பெற்று இருக்கிறேன். வாய்ப்பு அளித்தவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய தொகுதி பிரச்சினைகளையும் கூறி மானியத்தின்மீதும் ஒருசில கருத்துக்களை கூறுகின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால் ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் முடிப்பதற்கு முயற்சிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் முயற்சி வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

திரு. ந.பூ. இராமஜெயம்: துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்கள் கூடுதலானால் அதை அனுமதிக்க வேண்டும். இடையிலே ஏற்படுகின்ற இடையூறுகளுக்கு எல்லாம் அந்த நேரத்தையும் எனக்கு கூட்டிக் கொடுக்க வேண்டும் என்

முதலில் நான் கேட்டுக் கொண்டு என் உரையை ஆரம்பிக்கின்றேன். சாதாரண குடும்பத்தில் பிறந்த என்னை இந்த பெருமைமிக்க மாமன்றத்தில் உறுப்பினராக்கி ஒரு பெருமையைத் தேடித் தந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்து பத்திரிகை தொழிற்சங்கத் தலைவர் சோமு அவர்களுக்கு மத்திய இணை அமைச்சர் ஆகும் வாய்ப்பையும், பொதுச் செயலாளராகிய எனக்கு சட்டமன்ற உறுப்பினராகும் வாய்ப்பையும் ஒரே நேரத்தில் வழங்கி தொழிலாளர் வர்க்கத்தை பெருமைப்படுத்தியதற்காக இந்து நிறுவனத்தின் சார்பிலும், சங்கத்தின் சார்பிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். அதே போன்று 1994-ல் நடைபெற்ற மைலாப்பூர் இடைத் தேர்தலில் கழக வேட்பாளராக வெற்றிபெற வேண்டும் என்று கருதி இரவு பகலாகப் பாடுபட்ட அத்தனை பேருக்கும் குறிப்பாக தளபதி மு.க. ஸ்டாலின், மாவட்டச் செயலாளர் கிட்டு மற்றும் மத்திய மாநில அமைச்சர்களாகப் பொறுப்பேற்று உள்ளவர்கள், மாவட்டச் செயலாளர்கள், கழக செயல் மறவர்கள் அத்தனை பேருக்கும் நன்றி கூறிக்கொள்கின்றேன்.

'குயில் ஒன்று பறக்க விட்டேன் பாடி வர
கோட்டான்கள் கூட்டத்தில் குயிலோசை எடுபடுமா'

என்று கவியரசு கண்ணதாசன் அவர்களைப் பற்றி மாண்புமிகு கலைஞர் அவர்கள் முன்பு குறிப்பிட்டார்கள்.

முற்பகல் 10-25

இதனால் தயவுசெய்து நான் யாரையும் கோட்டான் என்று கூறுவதாக நினைக்க வேண்டாம். அவர்களும் கோட்டான் அல்ல, நானும் குயில் அல்ல. எனவே, இதன் பொருளைப் புரிந்துகொண்டு மயிலாப்பூர் வாக்காளப் பெருமக்கள் என்னை 1994-லே வெற்றிபெறச் செய்யவில்லை. வெற்றி பெறச் செய்தால் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அப்போது பட்ட அவஸ்தைகளை இவனும் பட வேண்டுமா என்று கருதி, அவர்களாலேயே தாக்கு பிடிக்க முடியவில்லை, இவன் எங்கே தாக்குப் பிடிக்கப் போகிறான் என்ற ஒரு காரணத்தால் எனக்கு வெற்றி வாய்ப்பைத் தரவில்லை. அதற்கு மாறாக ஜனநாயகத்தில் முழு நம்பிக்கை வைத்துள்ள தலைவர்